உ

கணபதிதுணை.

சிவானந்தபோதம்.

இரண்டாம்பதிப்பு

இஃது,

கோ. மாணிக்கமுதலியாரால்

மநோன்மணிவிலாசம்

என்னுந் தமது அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

1897.

இதன் விலை அணா—உ.

சிவமயம்.

சிவானந்தபோதம்.

காப்பு.

வெண்பா.

சிவானந்தபோதகமாஞ்சித்திமுததிதந்து
பவானந்தமானவினைபாழாம் - நவானந்த
ஈசனேதானுகுமென்வடிவுததாளிணையையப
பாசமுடன்றொழுவார்பார். (௧)

தியாகரருளபோதஞ்சிவசுந்தரன்சொல்
தயாபரிவென்றுய்வடிவந்தானும்-செயாவெனவே
பொய்யாவினுயகனும்பொற்குருவாஞ்சண்முகனும்
அய்யாவுமென்னுள்ளையாம். (௨)

மூத்திபெறுமென்னெஞ்சுமூர்க்கருடனேயிணங்கி
சித்தந்ததும்பிசசிதறுமன-முத்தனும
பட்டினத்தார்சாக்ஷிப்பகுத்தறிதலிந்நூலைத்
தொட்டவர்க்குமுண்டாஞ்சுகம். (௩)

பணியறுத்தலாகப்பரபோகங்கொண்டு
துணிவுறுத்தநெஞ்சுக்குச்சொல்லின்-அணியாய்
படபடென்னும்நெஞ்சம்பகருசிவானந்தத்
திடமுறுவார்தானேசிவம். (௪)

சிங்காதனமுடையசெல்வவடியார்கள்
தங்காறசிரமேறறரித்திட்டேன் - பொன்கால
ஏறறிப்புகழ்ந்தன்பாலிந்நூலென்புன்கவியால
சாற்றத்துணிந்தேனசரண். (௫)

நூற்பயன்.

விருசதம்.

அறிவதனைமனங்கேட்கச் சிவானந்தபோதத்தை
யறியநன்றாய், நெறியுடையமுத்தர்கள்தன்திருவடியிற
பணியவருள்நிலைக்ககாட்டிக், குறியுடனேயனுபவதது
வழியடைந்துகதிபெறவே கூறவென்றும், பிரிவறவே
வாழ்ந்துசிவப்பேரானந்தம்பெருகப்பேசுமிந்நூல். (௬)

ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்துதி.

நிறைந்தபரிபூரணமாய்நிற்குணமாய்நிர்மலமாய் நி
த்தனாகித், துறந்தமனத்துடையோர்க்குந்துரியனுமாய
தீதனுமாய்சசோதியாகிக், கறந்தமுலைப்பாலாகிப்பாலி
லுள்ள ருசிகாட்டுங்கர்த்தனாகிச், சிறந்தகுருமாணிக்கசு
வாமிகளை யெம்முளத்தில் றொழுதல்செய்வாம். (௭)

சமயாசாரியர்மூவர்துதி.

இசைகுருகிப்பரந்தானே யெழுந்தருளிவேண்டிய
தோரின்பந்தந்து, இசைக்குளவாயெதிர்த்தவனைமதித்

திடாச்சிவசமயமேலாய்ச்செய்து, இசைக்குளவோர்புகழ்ந்தேத்தசிவாலயதிறற்றேவாரஞ்சிறக்கவோதிப், பசைக்கருதியருள்பெருகுமூவரிணை மலரடியிற்பணிகின்றேனே. (அ)

பஜவண்ணர் அல்லமாப்பிரபுதுதி.

பத்திநிலைதவறுமற் கிருபையுமே வழுவாமற்பாரின்மீதே, யுததிசிவகணேசருக்குப்போதமுற்றுப் பூசைசெய்துகந்துஞானத், தத்துவமேயுணர்ந்துசிவந் தாஞ்கும்பஜவணர்சாக்ஷாத்கார,முததிதருமல்லமாப்பிரமீசரிருவர்தாள்முடிகொள்வாமே. (கூ)

மருத்துமலைதேசிகர்துதி.

பனனுமறைசாத்திரஙகளாகமங்கள் விரிந்தநூற்பலத்திற்சென்றே, யுனனுகினறமனத்தாலே பிறப்பிறப்பாமநோய்பலவற்றுற்றிடாமற், பொன்னுடையவம்பலவர்கழற்பணியச சிந்தையுற்றுப்பூஜைசெய்ய, வென்னதெனறே யெனையாணட மருததுமலைத் தேசிகன்றருளிறைஞ்சுவோமே. (கo)

நூல்.

(அறிவுக்கும் மனத்துக்கும்*வாக்குவாதம்.)

[அறிவுகூறுதல்.]

ஆனநெஞ்சமேயிமைப் பொழுதாகிலுமலைவறுத்திருந்தாயோ, போனநாளிலேநடந்ததுமிருந்ததும் புதுமைகளறியாயோ, ஈனமாகியகவலையை நீக்கியைம்பொறியினிலிணங்காமல், தானமொத்துநான்சொன்மொழி கேட்டுநீசரியென்று மகிழ்வாயே. (௧)

[மனங்கேட்குதல்.]

(அவதாரிகை) ஏதேது விபரீதமாக இருக்கிறது,இமைப்பொழுதாகிலும் பிரியாமலிருந்த நீ யிப்போதென்னை அன்னியமாகக்குறித்துசொற்படி கேட்கச்சொன்னதும் சந்தோடமாயிற்று, ஆகிலும் உதவியானகாரியமாக விருப்பிற் கேட்கவேண்டுந்தானே, ஆதலாற்சொல்கவென்று மனங்கேட்க வறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

முத்துபெறுமழகான நெஞ்சகமேபணியறுத்தன் மொழியக்கேணீ, சத்துசித்தானந்தபராபரமேகதியென்றுஞ்சார்ந்திடாமன், முத்தர்களுமோதிவைத்தநூலதனையாராய்ந்துமுனைந்திடாமற்,பத்திநிலைநில்லாமற் சிந்தனையுமோயாமற் பார்ப்பதென்னே. (௨)

---

* பாக்கள் அறிவுசொல்வது,, வசனங்கள் மனதுசொல்வது.

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) ஆயினியானோ பரத்தைச் சாரவில்லை யெனவும், நூலினுட்பொருளை யறிந்து முனைகொள்ளவில்லை யெனவும், பத்திநிலையி னிற்கவில்லையெனவும், சிந்தனைகளை யறுக்கவில்லையெனவும், சொல்கின்றனவற்றை எக்காலத்திலுமி யானறியாதவனாக விருக்கிறேன், இஃதந்தரங்கப்பாஷையாக விருக்கின்றது. மாடு, மக்கள், பெண்டீர், சுற்றம், வாணாள் முதலியனவே பொருளெனறுன்னியிருந்த வெனக்கிப்போது இடீதொன்று நான்குவகையிற் சிந்திககச்சொன்னீர். ஸ்பஷ்டமாகப்புலப்படுமாறு புகல்கவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

மாடுமக்களுஞ்சுற்றமும் பெண்டிரு மாளிகையுடன்வாழ்வும, நாடுராச்சியமாண்டிடும்புகழ்ச்சியுநம்மதெனநேதேகத்தி, னூடுசென்று நீயெனதுடலியானெனவு மூன்றலுததிடுநெஞ்சே, வீடுவிட்டுயிரேகிடும் போதினில்வினைவழிநுழைநதாயே. (௬)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) தேகத்தினுளளேபுகுநது மாடு, மக்கள், சுற்றம், பெண்டீா, உயாவாழ்வு, தேசாதிபத்தியப்புகழ்ச்சி முதலியவை சதமென்றும், தேகம் நான் எனது என்று பாராட்டி உழலுகிறுயென்றும், முடிவுகாலத்தில் வினைவழியிலே உயிரைநுழைகக்கிறுயெனறுஞ் சொல்லுகிறுய். நீ இதுகாறும்கூடஇருந்தையா இல்லையா ? இதுகாறும்யாதும்புகலாதிருநதவாறென்னை ? இப்போது இங்ஙனஞ் சொல்லுதற்குக் காரணமென்னை? என்றுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

கேணீநெஞ்சமேயுனனிடவயத்திலேகிடந்துலைந்த னமின்னுள், வீணிலேபலசெனனமுமெடுத்ததின்மெ லிருதிமெப்போது, ஊணிலேஙெனை யானறியாமலேயுத் தமர்நோககத்தாற்,காணுமிப்படிமானிடதேகமுங் கண் டதுமறிவாயே. (ச)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) அனேகந் திரோகத்திடபிறந்து பிறந்திறக்கின்ற தாகவுஞசொன்னீா, அவறறுளிம்மானிடதிரேக மருமையாக பெரியோர் கிருபாநோககத்தாறகிடைத்ததாகவுஞசொன்னீா, அது தெரியுமபடிக்குச் சொல்லுமென மனஙகேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

நாலுவகையோனியிலுமெழுவகையின் ேறூற்றத் துளனமாக, மேலுகநதமானிடந்தாபெபடுவேய ருமையாய்மெய்யனுகி, பாலுபோன்மனமுடைத்தாயபு ண்ணியமேமிகுந்துபவங்கீழாய்ததள்ளி, நூலுணர்வத ருமை நெஞசே யிருவினையிலொருவினையை நொறுக் கித்தானே. (ரு)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனல் மானிடதேக மெடுப்பதருமையென்று சொன்னீா, அதிலும் மெய்யனுகிக் கள்ளமற்று பாவம்போ க்கி புண்ணியமிகுந்து நூலுணர்வதருமை யென்றுங் காட்டு

கின்றீர். அப்படியானால் மானிடதேகத்திலேதானே பலவிதமா யருமையாகிய தேகமுண்டோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

மனிதரிலும்ட றவையுண்டுவிலங்குண்டு கல்லுண்டுமரமுமுண்டு, மனிதரிலுநீர்வாழுஞ்சாதியுண்டுஅநேககுலமனிதருண்டு, மனிதரிலுமனிதருண்டு வானவருமனிதராய்வருவதுண்டு, மனிதரிலேபிறப்பறுக்கவந்த தே யருமையெனவகுத்தார்முன்னோர். (௬)

[மனங்கேட்டதல்.]

(அ-கை) ஆனால் தேக மெடுப்பது எவ்விதம்? வினையென்பது ஒன்றோ இரண்டோ? இதில் சகாயமான வினையெது? வினை வழியாய்தேகமெடுக்கிறது யாராலேயென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

எழுவகையின்றோற்றமாய்க கடந்தோறும்பலவிதமாயின்பமுற்றே, பழுதறவே தேகமவருமபேய்மனமே நீசெய்தபணியினாலே, உழிதரு மிக்காலத்துமொழியாமவிருவினையாலுகந்துகிறகும, கழிதருமிவ்விருவினையிலொருவினையைநோக்குவதுகடினந்தானே. (௭)

[மனங்கேட்டதல்.]

(அ-கை) ஆனால் என்னாலே வினையுண்டாகிறதென்றும் வினையினாலே தேக மெடுக்கிறதென்றும சொன்னீர், வினை

வழியாய்ப் பல யோனிதோறும் எப்படிப் புகுந்து ஜநநமரணமுண்டாகிறதென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

மனவாக்குக்காயத்தான்மருவுஞ்செய்கை
மலர்மணம்போலுறுஜன்மமயக்கத்தாலே
இனமாக்கும்பிறவியினிலிழுத்துக்கொண்டே
யெத்தனையோஜனமத்திலிறக்கச்செய்யும்
தனவாக்காய்பிரமமாவுஞ்சிருஷ்டிசெய்ய
தான்றனைவளர்ந்திந்தத்தரணிமீதே
இனமாக்குவெம்பாசந்தன்னிற்சிக்கி
யிறந்தார்கள்பிறந்தார்களினமைநெஞ்சே. (அ)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் பிறந்தாலு மிறந்தாலும் வேதாகம சாத்திரச் சொற்படி நடந்தால், தேவேந்திரபதவி பிரம்மபட்டமுதலானது மடையலாமென்று சொல்லுகிறார்களே, அது சுகமல்லவோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

முந்தஜன்மமாம்புண்ணியமிகுந்திடின் முக்கியமுண்டாகும, பிந்தஜன்மமாம்பாவமேமிகுந்திடிற் பெரியதோர்துயராகும, அந்தரெண்டையுமறுத்திடிலொளிதருமரன்கழற்றுணையாகும், பந்தமானதோர் புராணங்களவேதங்கள்படைத்ததையறிவாயே. (கூ)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் மும்மூர்த்திகள் பட்டமாயிருந்தாலும், தேவேந்திர புகழ்ச்சி பெற்றாலும், பின்னும் பூலோகத்திலே பிறப்பதுணடோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வாழுமாலயனுருத்திரனிந்திரன்வானவரானாலும்,
சூழுமாயுகமபிரளயந்தனனிலுஞ் சுகமுடன் வாழ்ந்தா
லும், தாழுமானதொலலுலகிலவந்துறுவர்கள் தரணி
யோர்புகழ்ந்தேற, வீழுமநெஞ்சமே யரனடிசேர்ந்தி
டில்வினைக்குழுவிழந்தாயே. (௧௦)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் வேதாகமபுராண சாஸ்திரங்களுண்டாக்கி வைத்தார? அவற்றாலே என்னபிரயோசனம் என்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

நரஜன்மத்தை யெடுதததும்பவத்தினில் நழுகிடாதி
வ்வண்ணமே, திரமதாகவேயீசனுத்தரவினாற்செய்பவர்
புண்ணியமெனறே, வரமுடைத்தநல்வியாசருஞ்செய்த
னர்வழங்கிடுமதனாலே, பரவடியையுறுமுத்தர்களிருவி
னைப்பற்றறப்பார்த்தாரே. (௧௧)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் ஒருவர் செய்கிற பாவபுணணிய மொருவருககு உண்டென்கிறது எவ்விதமென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

ஒருவர்செய்தபாவபுண்ணியமொருவர்க்
குண்டென்றுசொல்லுகின்றவுமைநெஞ்சே
தருகுமவரவருயிர்க்குத்துணையார்சொல்வாய்
தந்தைதாய்பெண்டுபிள்ளை துணையுமாமோ
வருகுமந்தவியாதிகளும்வினை தானல்லோ
மக்கள்பெண்டுதந்தைதாய்வாங்கிக்கொண்டு
திருகுமவர்பின்னொருவர்க்கீந்ததுண்டோ
திருஷ்டாந்தங்கண்டுநீதெளிந்திடாயே. (௧௨)

[மனங்கேட்குதல்]

(அ-கை) அப்படியானால் புராணங்களிலே ஒருவர்செய்த பாவபுண்ணியம மற்றொருவருக்குண்டென்று பொய்சொல்ல வேண்டியதென்னவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

பாசபந்தமானதொருமூடர்க்கிந்தப்
பற்றுதலைவையாட்டால்நம்பமாட்டார்
ஆசைகொண்டுசெய்யார்கள்விகாதஞ்செய்வார்
அதனாலேபொருத்தமவைத்துச்சொன்னதல்லால்
நேசமிதுபோலவேபகைத்தார்பாரு
நீங்கினால்வேறுகெதியிலாதபேராக்குண்டோ
மோசமிதுநம்பாதேநெஞ்சேகேளு
முனைந்தவர்க்குச்செய்தபலனமுடியுந்தானே.

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் ஒருவர்க்கொருவர் நன்மை துன்மைக் கூட்டுறவில்லையே, அப்படியிருக்க, ஒருகுடும்பத்திலே பந்து ஜனங்களில் தாங்கள் ஒன்றுக்கொன்று பிறவற்றிற் கிடங்கொடாமலும் உள்ளுக்குள்ளே அனேக விகற்பந்தோடு மனம பேதித்து வாழ்கிறார்களே, எந்தப்பற்றுதலைக்கொண்டு ஒன்றுபோலிருக்கிறார்களென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

பொண்ணாலும்பொன்னாலுமபூமியாலும்
பெருக்கவேயிச்சைகொணடொன்றுக்கொன்று
தின்னார்களுறவாடிச்செத்தாரல்லாற்
சேர்ந்துமனமொனறுகிச்சிறந்திட்டாரோ
கண்ணாலேபார்த்துநீசுகங்கணடாயே
கவலைக்கேயாளாகிக்காநததிழந்துப
புண்ணாகிப்பிறப்பிறப்பிற்புகுந்திட்டாய்நீ
பூமலர்ததாடுணையெனறுபுகழ்வாய்நெஞ்சே.(கச)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் வினை வழியே யுயிரித்தேகத்தை விட்டினிமேற் றேக மெடுக்கிற தெந்ததேகமோ வதைநதெரியும் படியும் இத்தேகத்தைவிடும்போது யாதொருகுறிகளுண்டோவென்றும் மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வெண்பா.

தேகந்தனிற்பொறியுஞ்சீராம்புலன்கரணம்
ஆகந்துறக்குமப்போதக்நேரம் - போகமது

எவ்விடத்துச்சென்றதோயேற்குங்கடவுமும்
அவ்விடத்தைநன்றாயறி. (கரு)

[மனங்கேட்டதல்.]

(அ-கை) ஆனால் வினைப்பயனுமறிந்தேன், இந்த அருமையாகியமானிடதேகம்வந்ததுமறிந்தேன், வேதாகமபுராணசாத்திரங்களது கட்டுப்பாடு மறிந்தேன், பிறப்பிறப்பென்கிற விவரமுமறிந்தேன், வினைவழியே தேகமெடுக்கிற தெனனும் விவரத்தையும் என்னால் வினையுண்டாகிற தென்பதையு மறிந்தேன், ஒருவாக்கொருவா நன்மை, தீமை, உதவியில்லை யென்பதுமறிந்தேன், ஒரு குடும்பத்திலே பலஜனங்களொன்று போற் கூடி வாழ்கிற பந்தத்தையுமறிந்தேன், எல்லாமுள்ளபடி ஒத்துக்கொண்டேன், அரனது திருவடி நிழலையடைகிறதே சுகமென் றாசைகொண்டேன், இத்தனைநாளாக வென்னை நம்பியிருந்த குடும்பத்தாரெல்லாம இளந்தைகளாகவிருக்கிற படியினாலே யவர்களை விட்டு விட்டால் வேறு கெதியின்றி அவர்கள் வருந்துவ ராதலா லவர்கள பக்குவகாலபரியந்த மிருந்துகாக்கவேண்டுமென்று பரிதாபப்படுகின்றமையா லதற் கொருவயணஞ் சொலக வென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

விருத்தம்.

அவரெல்லாமிருக்கவிப்போதுன்னையேம
னழைத்துவிடிலியாதுசெய்வாயழகுநெஞ்சே
யிவர்களுக்குப்பிழைக்குமவகைதிருமயிலவந்தே
யேதுவாய்முடிபபதுணடோ வெண்ணிப்பாரு

தவறிநீகடம்விட்டுப்போகும்போது
தான்கூடமாண்டாரோபிழைப்பில்லாமல்
அவரவர்க்குச்சிவன்றுணையெனறெண்ணிடாம
லேயத்தாவிப்படியேயலேவுற்றாயே. (கரு)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனாலறியலானேன், இனிமேற் பாசபந்தத்தில் வீழ்வேனோ? திருவடியை யடையாமலிருப்பேனோ? ஆனாலி ன்னுங் கொஞ்சககாலம் பொறுத்துத்தான திருவடியை யடை வதற்கேது பண்ணிககொள்ளக கூடாதோ? இப்போது தா னே தணிநது கொளளவேணுமோவென்று மனங்கேட்க அ றிவு கூறுகினறது.

[அறிவுகூறுதல்.]

காயமனவாக்குதான்றளர்ந்தபோது
கருத்தழிந்தேயுறுதியற்றுப்பாசமீறி
நேயமந்தமாய்கையினிற்பற்றிக்கொணடால்
நெறறிக்கண்படைத்தவர்தானிலேபபிபபாரோ
மாயமனமேயிந்தககாயந்தானும
வல்லமையோவெததனே நாள்வாழுமோசொல்
தாயமதுநிலேயல்லவென்றுமுன்னோ
கண்ணொளிமழுஙகுமுனங்கைகதியுறறாரோ. ()

[மனங்கேட்குதல்.]

(அ-கை) அப்படியானா சாவவு மச்சங்கொண்டேன், இனி திருவடி யடைவதற்குப் போநத வழி சொல்லென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது

[அறிவுகூறுதல்.]

வெண்பா.

முந்திபரிபூரணமாய் முத்திபடைந்தவர்கள்
சிந்தைமகிழ்ந்தோதுஞ்சிவநூலே - யுந்தியுந்திப்
பார்த்தறிநீநன்றாய்ப்பகுத்துப்பகுத்துநெஞ்சே
சேர்த்தறிநீயெனவசத்திற்செல். (கஅ)

[மனங்கேட்குதல்.]

(அ-ரை) அப்படியே சொல்லுகிற சில நூல்களைப்பார்த் தேன், திருவள்ளுவநாயனார் முப்பால் வைத்துக் குறள சொன்னதிலே "துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு மிலவாழ்வா னென்பான் றுணை" என்று சொற்றனரஃதென கொலென மனம் வினவ வதற் கறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

விருத்தம்.

யாவிருக்குநிலையதனையவர்க்கே யதனினிலையமர,
மூவர்முதலாம்ரிஷியோர்க்கு முழுக்கத் துறந்தோர்காமி
யர்க்குந், தேவரீர்க்குந்திறமுதலாய்சிறக்கக் காட்டுங்
கண்ணொளிபோல், நாவிலிருந்தே அஞ்சனமாய்நவின்ற
மொழியென்னாயகமே. (கசு)

[மனங்கேட்குதல்]

(அ-ரை) ஆனால் முத்தி நிலையை மாத்திரம் தனிமையிற் பேசுகின்ற நூல்தானெவ்விதமாகச் சொல்லுமென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வெண்பா.

தேகமெடுத்ததுவுஞ்சிந்தையுடைத்ததுவும்
போகசமுசாரதிதிப்புக்கதுவும - தாகமது
கொண்டுதவிர்த்ததுவுங்கூறுங்கனவெனவே
கண்டுசொல்லுமநூலதனைக்காண (உ0)

[மனங்கேட்குதல்]

(அ-கை) ஆனால அந்த நாலும்பார்த்தேன், அதிலுள்ள பொருளைச சங்கையற இப்படி யிருக்குமென்று தெரிந்து கொண்டாற் போதுமோ வென்று அதிவினயத்துடன மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

விருத்தம.

அறிவுக்கேசாட்சிகொண்டு நூலைப்பேசி
அங்கத்தைத்தானறிந்து அகத்தைநோக்கு
குறிவைத்தபடியிருந்துமெய்யைப்பொய்யாய்க்
குற்றமென்றேபொய்யைத்தானபொய்யாய்க்கண்டு
நெறியுற்றேயிருவினையுந்நீக்கிப்போட்டு
நேசமுடனீ - யுடனபாசமவைத்து
பிறிவற்றுஒன்றாகிவாழுலாகும
பேதித்துபம்பாகாத்தபேணிக்கூடே. (உக)

[மனங்கேட்குதல்]

(அ-கை) அந்தப்படிதானே யனுபவிக்கிறதா? மற்றொரு வருடைய சகாயமும் வேண்டி யிருக்குமா என்று மனங் கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

புகர்ச்சமயமாகின்ற பலசமயந்தன்னிலே புகுந்தி டாமல், அகச்சமயமாகின்ற சிவசமயதரிசனைக்கே ய கப்பட்டானீ, மிகப்பெரிதாம புகழினைநீபடைத்திரு ந்தும் பெரியோரைமேவிடாமல, தகைப்படவே பிறவி யென்றநோய்க்குள்ளே சிக்கிநீதான்தளர்வதேனோ ()

[மனங்கேட்குதல்]

(அ-கை) ஆனால் பெரியோர்களைச் சாரவும் வேண்டு மோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்]

பெரியோரைச்சாராமலாகனுக்கே யாட்புசெய்து பேசிடாமல், தூரியமாகிந்த நிலையிற் பூஜை செய்யாமல் சுற்றிச்சுற்றி, அரிபயனுங்காணு பரமசிவமென்றதையு மறிந்திடாமல், சரியென்றுமிவ்வாப்பயனுங்கொண்டது வே கோலமாய்ச்சாதித்தாய (உக)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் தெளிந்த பெரியோர்களுக்குஜகத்திலே பிரயோஜனமில்லையே, எவ்விடத்திலிருப்பார்களோ அவர்க ளைக்கண்டு தரிசிக்கலாகுமோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

தெளிந்த்துறவியிகந்தனிலே தேகப்பிராரத்துவப் படிக்கு, பொழிந்தேகரணத்தனுபோகப் புவனத்திருந்

துமெச்செயலும், ஒழிந்துசிந்தைதெளிவுற்றே ஒன்றே சிவமெனறிருப்பாரச, ஏிழிந்தபெருமவனைக்கொண்டே றுவார்களிசதந்தோரோ. (௨௪)

[மனங்கேட்குதல்]

(அ-கை) ஆனல் இகததில சஞ்சரிக்கிறதினுல் பெரி யோாகளுக்கு இடறுவராதோ வெனறு மனங கேட்க அறிவு கூறுகினறது.

[அறிவுகூறுதல்.]

கருவியகன்றிவ்வுலகத்தைக்கனவென்றிருக்கக்கரு ந்ததனுள், ஞருவைககணடொப்புவமை யற்றுள ஞமபுறமபுமொன்ருகிக், குருவைப்பணிந்து பூரணத திலெ குலாவுமடியாாஜகந்தனிலே, மருவபபொருந்திவா ழுந்தாலுமமாசற்றிருப்பாாவலலவரே. (௨௫)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனல் விபரீதமிகுந்து வந்ததானுல் அதை நீக் கிக் கொள்ள வலலமையுணடோ வெனறு மனங்கேட்க அறிவு கூறுகினறது.

[அறிவுகூறுதல்.]

முந்தவிருந்தவஞ்ஞானமூடமானசத்தியையும், பந் தமறவேதுணிந்து பராபரனைததினமுமனைக்கொணடு, சிந்தைதெளிந்தே குருபரனைச சிவமென்றெணணுந்து ணிவதனுல், தொந்தமறுத்துச்சிவானந்தச் சோதியது வாய்ச்சுகிப்பாரோ. (௨௬)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) அப்போப்பட்ட பெரியோாகள எந்தச்சாதியா யிருந்தாலும் தொண்டுபடலாகுமோ வென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சாதிபேதந்தனைக்குறித்துத்தயங்கிமயங்கித நளராதே
சாதியாவதெவரறிவர்சருவவுடலுமொன்றுசசே
சாதியாவரெவரென்னில்தன்னையறிந்துசிவமான
சாதிபெரியசாதியென்றுசாற்றுமறைகளசத்தியமே. ()

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் பெரியோாகளை சாதிபிரிந்து சொலலு கிறதினாலே குற்றமுண்டோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்]

ஞானம்பதியா விழிகுலத்தோா நாட்டிற்பிரித்தே சாதிதன்னை, யீனசாதியாரெனத்தெயிரழ்ந்தாாமுத்தாப த்தனையும், ஆனபெரியோர்தங்களையுமவரிலொன்றாய்க குறித்துககொண், டனமுனைத்தேயருநரகிலிழிந்துபோ னரிகத்தோரே. (உஅ)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) இப்பேர்ப்பட்ட பெரியோாகள ஜகத்தோரிக ழத்தக்கதாக திரிவானேன்? ஜகத்தோரிகழுவானேன்? இத னால் யாருக்குத்துன்பம் யாருக்கு இன்பமென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

பெரியோரைப்பித்தரெனவுலகத்தோர்கள்
பேயரெனவிகழ்வரெனைப்பிரிந்துக்கேளு
திரிவர்களிச்சைப்படி ஜகத்தோர்பார்த்து
தீவினையுநல்வினையுந்திரட்டிக்கொள்வார்
சரியாசென்றிருவினையுமொழித்துப்போட்டு
சச்சிதானந்தமெனும்பதத்திற்சார்ந்து
துரியாதீதப்பொருளைப்பெற்றுமந்தச்
சுயஞ்சோதியாகியேசுகமுற்றாரே. (உகூ)

[மனங்கேட்டதல்]

(இ-கை) ஆனால் பெரியோர்களிருவினையும் ஜகத்தோருக்கு ஒப்பித்து சுகம்பெற்றார்களே, அவர்களை யிகழ்ந்த வுலகத்தாரென்னலாபம் பெற்றார்களென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

பெரியோரையிகழ்ந்தவர்கள்பெற்றலாபம்
பேசக்கேள்நெஞ்சகமேபெருமையாக
பரியேறிப்போனவனொருவனிதீயில்வீழ்ந்து
பதைத்ததுபோலடியாரறிவில்நெருப்பைக்கூட்டி
கரிவாயில்பொருளைப்பறிகருமிடம்போலே
நகைத்திகழ்ந்தேரிவாயிநரகம்புக்கு
விரிவானவெழுநரகில்விழுந்திளைத்து
மெலிந்திடுவாரென்றுமனமேவிசுக்தானே. (௩0)

[மனங்கேட்டதல்.]

(அ-கை) ஆனால் பெரியோர்கள் மகத்துவ மிப்படியென்றுமறியலானேன், அப்படிப்பட்ட மகாத்துமாக்கள் தெரிசனங்கண்டு கொள்ளுகிறதற்கு மார்க்கமுண்டோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

குற்றமேதுங்குறியாமல்குணமும்பலவாய்விரியாமல்
ஒத்துபொறிகளபுலனைந்துமுறவாய்நீயுமுரைந்திதனை
பத்துமபதனமாகத்தான்பட்சமிகவுமவைத்துரத்தாப்
சிந்தமுதனைச்சிவமாக்குஞ்சிவானந்தபோதமிதே. (கக)

[மனங்கேட்டதல்.]

(அ-கை) ஆனலெவர்களிடத்திலும் சாத்திரத்தின கேள்விகேட்டுத்தெரியுமபடிச செய்துகொள்ளுகிறதுதானே, அவர்களாகளினைகருட்பட்டு தொண்டுபண்ணவேண்டுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்]

வேறு.

ஐயமின்றியுடல்பொருளுமாவிமூன்று
மாண்டவனேயுனனெதனறளிததுப்பின்னும்
துய்யகுருநாதனுக்கேயடிமையாகிச்
சொன்னபடிகேட்பதுமேதொண்டனுகி

மெய்யனென்றேயவர்மனமுங்களிக்குமட்டும்
வேணடினதோர் சோதனைக்குமிதத்திடாமல்
செய்யதிருமலரடியிற்காத்திருந்தாற்
செவியதனிலுபதேசம்செய்வாராமே. (கூஉ)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால வெகு பிரயாசையா யிருக்கும் போலே இருக்கிறதே, சாத்திரங் கேள்விமாத்திரங்கேட்டு கொண்டு யுக்தியினாலே அனுபவித்து முத்தியடையக்கூடாதோ? குருசமுகத்தில் தொண்டுபட்டுதான முத்தியடையவேணுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வே று.

இருவினையுஞ்சமமுடைத்தேயெழுந்துவந்த
வெண்குருவாமாணிக்கவீசனாகும
குருவடிவாயம்பலவருபதேசித்த
குறிப்பபைத்தானறியாயோகுருட்டுநெஞ்சே
மருவுமிந்தவுடலுக்குளுடலைக்காட்டி
வாக்குக்குவாக்கருளியனமுமோதது
திருவடியிலடையகுருமுகூர்த்தமல்லாற்
சிவானந்தபோதகமுந்தெளிந்திடாதே. (கூகூ)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) அப்படியானால ஞானசாரியரிடத்தில் அனுக்கிரகம பெற்றுக்கொண்டால் போதாதோ? சாத்திரமும் பார்க்க வேண்டுமோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

சேறுபோல்தளதளெனவலைபூமிக்குள்
திடமானகம்பத்தைநாட்டினக்கால
மாறுகொண்டுவிழுந்திடுமென்றதறைசுற்றி
மணற்கல்லைகல்கெட்டித்துமுறைக்குமாபோல்
கூறுகின்றசாத்திரத்தின்சாட்சிதந்து
குலைந்திடாதிடமுற்றுக்குறித்துநின்று
வீறுகொண்டுநெஞ்சேநீயனுபவித்தால்
மெய்ஞ்ஞானவீடதனில்விளங்குவாயே. (௧௪)

[மனங்கேட்டதல்]

(அ-கை) ஆனால் சாத்திரம் தெரியாதபேர்கள் சற்குருவினிடமுபதேசம்பெற்று சாதித்து அனுபவமடைந்தபேர்கள் பெற்றகாட்சி நூலிலுள்ளபொருளுக்கு ஒத்துக்கொள்ளுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

உறுதிகொண்டபிள்ளையென்றுலாசான்வைத்த
வுபதேசங்கேட்டளவிலுறுதிகொண்டே
இருதயத்தில்நாட்டினதுநழுவிடாம
லெப்போதுங்குருபத்திதவறிடாமல்
மறுகவலைசாராமலூனறப்பெற்றால்
வழங்குநூல்பேசுகின்றவண்மைக்கொக்கும்
கிருபைதருமுத்தியேயடையலாகும்
கிட்டினவர்க்கேதுகுறைகேடிலநெஞ்சே. (௧௫)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் ஞானனுபோகம் ஒருவர்பெற்றிருந்தால் பெறாதவர்கள் அந்த அனுபோகத்தைச் சொலலென்றும் காட்டென்றும் சொன்னாலவர்களுக்கு ஒத்துக்கொள்ளுமபடி சொல்லலாமோ? அபபடி இபபடியென்றுங்காட்டலாமோ? ஆகிலும் மெய்ப்பொருளினிட பிரகாசத்தைப் பேசினால மனமொத்து களிப்பார்களோவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

ஒருவர்தினவொருவர்சொரிந்தற்றபோது
வுற்றவர்க்கோசொரிந்தவர்க்கோவுற்றுப்பாரு
மருவுமந்தசொப்பனத்திறக்கண்டகாட்சி
மகிழ்ந்தவர்க்கோகேட்டவர்க்கோமதித்துப்பாரு
உருசியுடனறுசுவைகொண்டுண்டவர்க்கோ
உண்மையுடனகண்டவர்க்கோவுணர்ப்பாரு
தெரிசனமுமங்களைகண்டுசிந்தையற்ற
சிவஞானமவரவர்க்கேதெளியுந்தானே (கசு)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் மெய்ப்பொருளினுடைய பிரகாசம்அவரவர்கள் கண்டெளிக்கப்பட்டதுதானோ வென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

நீதானேயறிந்தல்லோநிலைக்கவேண்டும்
நீட்டுரோசொல்லுகின்றநெறியிறசென்றாற்
போதாதுபோதாதுபொந்துக்குள்ளே
புலியிருக்குமென்றதெனைபபுகுந்துபார்த்தால்

வேதாளமென்றதொருமயக்கந்தீரும்
  மெய்யடியார்மனங்களிக்கமேவிவாழ்வாய்
வாதாடிமுத்தர்களைவிட்டிடாதே
  மனமேநீயுள்ளபடிவணங்குவாயே. (௩௭)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனாற் றனித்தனியே சுகமடைவதாயிருக்க, பெரியோராக ளொருவர்க்கொருவர் கூடிக்கொண்டானந்தமிகுந்தாடுகின்றார்களே அஃதெவ்வித காரணமப்பற்றியென மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்]

மறைப்பானமூன்றுமுமிழ்ந்தமுத்தர்
  மனவெளியாம்பெருவெளியிலமருவலாலே
[illegible]றப்பானவாகாசமொன்றானதனினிற்
  சூரியன்றன்பிரகாசந்தோற்றம்போல
சிறப்பாகத்தேகத்திலிருந்தமுத்தர்
  திருஷ்டியினாற்கலந்தொன்றாய்த்தியானிப்பார்காண்
மறைப்பானதில்லைநெஞ்சகண்மணிக்குள்
  வன்னியொளிமருவுமந்தவண்மைபாரே. (௩௮)

[மனங்கேட்குதல்]

(அ-கை) ஆனாற் சாத்திரங்களிலே சரியை, கிரியை, யோக, ஞானமென்று சாற்றுகின்றதே யவற்றுள் முன் சொல்லிய முத்தொழிலுஞ் செய்து முடிந்த பின்னரன்றோ ஞானமறிய வேண்டியது. அப்போதன்றோ ஞானாசாரியர் கிருபாகடாக்ஷம் வேண்டியதென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சரியைமுதன்முத்தொழிலுஞ்செய்கின்றோர்கள்
சாயுச்சியமுத்தியைப்பணியவேண்டுமே
உருசியுடனமுதளித்துப்பாதபூசை
யுண்மையுடனுபசாரஞ்செய்யவேண்டும்
பரிசைகொண்டுசோதித்துநிந்தைசொல்லி
பகைத்துவிடினகைத்திடுவார்பலனேபாழாம
விரிவுகொண்டுமெய்க்காதேயுற்றுப்பாரு
வீணருடனகேளவிவிட்டுமெய்யையபாரே. (௩௯)

[மனங்கேட்குதல்]

(அ-கை.) ஆனாலவ்வளவு மருந்துவமிருக்கிறபடியினாலே யமமுதத்தொழிலினது லாபமுஞ் சனுவிலே யிவராலே முடித்துக்கொள்ள லாகாதோ வென மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சாயுச்சியமுத்தியையடுத்துக்காத்துச்
சங்கையறுத்திருவுளத்துப்பாக்குக்கொத்தால்
நீயுச்சியமாகவென்றுகிருபைநோக்கில
நேரானமுத்தொழிலினிலாபநோக்கு
மாயுச்சியமாகவேயம்பலத்தான்
மலரடிக்கேயன்பாகச்செல்வாய்நெஞ்சே
பாயுச்சியமாகவேபெற்றோருண்டு
பராபரத்தையடை[illegible]தாமே. (௪0)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனு லித்தகையவனுபவத்தை, யில்லறத்தினின்று பெறறுளரெவரோனுமுணடுகொல்லோ, அன்றேல், துறவறம்பூண்டு, சந்நியாசியாய பற்பல விரத வைராக்கியமுமசாவசங்க நிவிர்த்தியுஞ்செய்து, ஜெகசஞ்சாரத்தை விட்டகன்று, ஆரணியசஞ்சார முற்று வருபவர்களின ஞானமெனனு மறிவுபிரகாசமாகி ஸபஷ்டப்பட்டுளரோ வென்றும, இவர்களிலுந தம்மனதுட் குடிகொண்ட வஞ்ஞானந்த காரத்தை யோட்டும் வனமையிலராகி மூடராதலுமுணடோவென்றும மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சந்நியாசியானதிலுமூடருணடு
 சமுசாரஞ்செய்வதிலுஞானியுண்டு
மூன்றுமேலேயதுவாமப்பிராரத்துவங்கள
 மூட்டிவிட்டுஞானிகருமுறைதப்பாது
பின்னும்மேலிருவினையும்விட்டாடரசசெய்து
 பெற்றிடுவாராசானறன்கிருபைகொண்டு
பின்னுமின்னங்களைவிட்டிறைஞ்சே
 பெருஞ்சோதிமுத்திநிலையடையப்பண்ணிக்கூடே. ()

[மனங்கேட்குதல்]

(அ-கை) ஆனால் இல்லறத்திலேயிருந்தும் ஞானம் பெறறுக்கொள்ளலாமெனகிறது சரிவாயிருக்கிறதே, உலகத்திலுள்ள பலரும ஞானசிரியரிடத்தனுக்கிரகம் பெற்றுக்கொணடு முத்தியையடைவ தருமையாயிருக்கிறதே, அதிலென்னபிரயாசையென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

யாவர்களும்பெரியோரையடுத்துக்காத்து
அவரடிக்கேபணிந்துமிகவன்புசெய்து
ஆவலுடன்பன்னிரண்டுவருடங்காத்து
மப்போதுபக்குவத்தையறச்சோதித்துத்
தேவர்முதன்மூவர்களுந்தேடிக்காணுத்
திருவடியுமுடியுநடுவுந்தெரிசிக்கத்தா
ஞவதனுலுபதேசஞ்செய்வாரென்றுசே
நல்லறிவாலவெகுபூசைநவின்றதாமே. (சஉ)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனால் புண்ணியமிகுந்து சிவாசாரபக்தி, நேயம், சிவார்ச்சனை, வெகுகாலஞ்செய்து பின்னே நல்லறிவுபிரகாசித்திருக்கும் போகளுக்குப் பெரியோர்கள் தெரிசனங்கிட்டும் அப்போப்பட்டவன் ஆசான்திருவுளத்துப் பாங்குக் கொத்துநடந்து பரகதியடைவானென்று சொன்னது மறியலானேன். ஆகிலும்பெரியோர்களை யடுத்து, அவர்திருவுளத்துக்குப் பாங்குபோலநடந்து, தீக்ஷையும் பெற்றுக்கொண்டு, சாத்திரத்திலுள்ள பூட்டை அனுபோகத்துக்கும் ஒப்பும்படி தெரியவுங் கேள்விப்பட்டுக்கொண்டு, ஆசாரியரைக்கவனியாமல், மதங்கொண்டு, ஆசாரியார் திருவடிசூட்ட மகிழ்ச்சியில்லாமலும், பூரணதீக்ஷையாகாமலும், தட்டிப்போகிற துண்டோவென்றுமனங்கேட்க அறிவு கூறிகின்றது.

[அறிவுகூறுதல்.]

அடியருக்குத்தொண்டாவதருமைநெஞ்சே
யவரவர்க்குவிட்டகுறையடுந்தகாலம்

பிடியாமலிருப்பாரோதொட்டுக்கொள்வார்
பேதமைகளாலுலகமபிணைகருவந்து
குடியாகுமதனுலேநமுகிப்போவார்
குற்றமறச்சற்குருவைக்குறிக்கசசொல்லும
விடியாதகாலநதிலிருளேயாகும்
விடிநதபின்புகலனுக்குவெளிசசமாமே (௪௩.)

[மனங்கேட்குதல்]

(அ-கை) நீர் உலகவிபரீதம வருகிறதாகவும், அககாலே ஆசானைவிட்டு நழுகும்போது ஆசானைக குறறமாககக்குறிததுக கொணடு போகிறதாகவுஞ்சொனனீர், அறியலானேன. ஆகிலுமிவவளவிலே நழுகினாலும், இனனெரு தேகம்புணணிய மிகுந்த மானிடமாயெடுதது, சடுதியிலேவிட்டகுறை முடியும்படி ஞானசாததிரியார் கிருபையடைநது, முததியடைவாரகளோ வெனறு மனஙகேட்க அறிவு கூறுகினறது.

[அறிவுகூறுதல்.]

இவ்வளவுந்தொட்டேகுமபோதுமீண்டும
இகபோகவிபரீதமவநதாலுந்தான
அவ்வளவுந்தான்குருவினறிருவுளத்துக்
கனபுதவறுமலேயகனறுறுகிற்
றெவவளவாய்விட்டகுறைதாக்குஞ்சேர்க்கும்
தேசிகனைச்சற்றமெனிற்தெளிந்துமேலாம்
நவ்வளவாயிழிந்துவிடும்பின்னுமந்த
ஞானகுருத்துரோகமுற்றுநரகஞ்சேர்வார். (௪௪)

[மனங்கேட்தல்.]

(அ-கை) ஆனால் ஞானசாரியாரிடத்தி லொத்தாப்போலி ருந்துதெரிந்துகொண்டு, ஞானகுருத்துரோகி தானேதான்றெ ரிந்தவனைப்போலே பேசுகிறானே, உலகத்தார்களுஞ் சிறிதுபே ர்கள் அதைக்கேட்டுமயங்கி ஒத்து வணங்குகிறார்களே அவர்க ளுக்கு மிவர்களுக்கு மென்ன லாபங்கிடைக்குமென்று மனங் கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்]

புலித்தோலைப்பசுவரித்துப்போர்த்துக்கொண்டு
புலியென்றாற்புலியாமோவினனுங்கேளு
பலிப்பாகப்பெண்போலேபுருடன்வேடம்
பகட்டினாலவனுருவம்பாவையாமோ
சலிப்பானநரகத்தில்வீழுமாண்டார்
சற்குருவின்றனையிடத்தேற்கூற்றுக்கொண்டு
நலிப்பாகப்புலிப்பாயுமியல்புபோலே
நானிலத்தோர்வணங்கினதாலீனமாச்சே. (சரு)

[மனங்கேட்தல்.]

(அ-கை) ஆனாலவன் றானுங்குருத்துரோகியானபடியினா லே எவ்வளவுதெளிவாய் பேசினாலும் முத்திவிலக்க னென்ப து சரியே. அவன் நிச்சயவானென்று நேசிக்கிறவர்கட்கு மெ னவிலாபமென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

மரப்பசுவின்முலையதனிற்பாலுண்டாமோ
மலடிகர்ப்பத்தனுடையமகிழ்ச்சியுண்டோ
நூரத்தறியாததண்ணீர்ப்பாம்பதன்றலையிற்
றுலங்குமணியிரத்தினமுண்டோதான்றுமோசொல்

பரத்தினிடமிலையதனைக்குருமுன்பாகப்
பதியாதமூடனையேபணிந்ததாலே
வியாத்தமேயல்லாமலுதவிசெய்ய
விஞ்ஞானமுண்டாமோ விளங்குநெஞ்சே. (௬௬)

[மனங்கேட்குதல்]

(அ-கை) ஆனாலறியலானேன, ஸ்ரீகட்கு ஞானம்வாராதென்று ம, புருடாககுமாத்திரம் ஞானமுணடெனஎதனாலே? அதுவிளஙகுமாறு சொல்கவெனறு மனஙகேட்கஅறிவு கூறுகினறது

[அறிவுகூறுதல்.]

அஞ்சுகின்றபெண்ணென்றுமாணென்றுந்தா
னஞ்சுபஞ்சபூதத்திற்பிரிந்ததுண்டோ
நெஞ்சிலுள்ளவஞ்சகங்கள்வேறுமுண்டோ
நிறமவேறுகுணமவேறுநேசமவேறு
மிஞ்சுகின்றவுயிர்தானும்பெண்ணெனறுண்டோ
மெய்கண்டநாலதிலேபிரிக்கதுண்டோ
சஞ்சலத்தாற்சொற்கேடடிமயங்கிடாதே
சங்கையறமுன்னூலைச்சார்ந்துபாரே. (௬௭)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆனல் பேதமைமயெனபது மாதர்கணிகலமென்றும் ஔவையார் கூறியதென்கொலென்றறிவுவினவ மனங் கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

ஆணுக்கும்பெண்ணுக்குமறிவொன்றேயாம்
ஆணாலும்பேதைகுணமபெண்ணுக்குண்டு
வீணுக்கேயெபித்தசென்மமனந்தங்கோடி
விவேகமுத்தியடைந்தவர்களதிலுமுண்டே

ஊனுக்குத்தேடியுண்டேயுறங்கிச்செத்த
வுலுததருண்டிபுருஷரிலேயனந்தங்கோடி
தானுவினுக்கேகசராசரந்தாநெஞ்சே
சற்குருவுக்கப்படியேசார்ந்துபாரே. (சரு)

[மனங்கேட்குதல்.]

(அ.கை) ஆனலதுவு மறிபலானேன் நான் கேட்கப்பட்டசங்கைகளுக்குச் சரியெனனும்படி சமாதானங்கொடுத்து நன்றுக வருமையாப் தெளிவுடனேயா சொலலப்போகிறுர்கள! இனிமேல நடக்கவேணடிய தெனனவென்று குதூகலங்கொண்டுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்]

இன்னமின்னமபிறவிதனிற்பிறத்தனன்ருே
வினிமேலுமபிறவாமலிருக்கைநன்ருே
வுனனுகினைறநினைவேது கருதநகேட்தா
வோதுகின்றவாக்கேதுசெவிதானேது
பனனுகினைறகலையேதுபண்தானெங்கே
பாடுகின்றசத்தந்தானதொனிததெங்கே
முன்னிலையாய்ஞானகுருமொழிந்ததேது
முத்திநெறியாய்மனமேதமுனைநதுபாரே. (சகூ)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) ஆனலெவ்விதத்திலேயும் பாாக்குமளவில், இக்குடும்பச்சேற்றில உழைத்துக்கொள்ளுகிறதும், அதற்கொத்தாசையா யுலகத்தார்சொல்லை விசுவாசமாய் ஒத்துக்கொள்ளு

கிறதும், துக்கமேயொழிய வுள்ளபடி குடும்பத்தார் என்மேல் பிரியமாயிருக்கிறதேயில்லை. எப்படியெனில்·—நான் சிலநாள் சம்பாதனையில்லாமலும், தேகசௌக்கியமில்லாமலும், ரோக ஸ்தனுகவிருக்கும்போது சர்வததிரபேர்களும என்மேல் மன துசலிப்புற்றிருந்ததுகண்டேன், ஏவல்பணிவிடையில் வெறு ப்பானதுகசண்டேன், சாலவும் பிரக்ஞைதப்பியிருக்கும்போ து பெண்டுபிள்ளைகளை எதிர்விட்டா ஆஸ்தியைக கேட்கச் சொன்னதுங்கண்டேன், அலரவர்களழும்போது ஒப்பனைசொ ல்லி அழுகிறவயணமுங்கண்டேன், யெல்லாப பொருளையிச்சி த்திருப்பதென்று மறியலானேன், எனக்கு உரிமையானபோ ஒருவனையுங்காணேன், அல்லது சிலது நாளுழைத்துமக்கண் முதலாகியபோ சமயாதிககசாமாத்தியம் வருந்தனிலும் உழை த்துப்போட்டு அதன்பின சும்மாயிருப்போ மென்றாலும் என் னிச்சைப்படிநடக்கவும்மாட்டாது, அதுவுமறியலானேன். ஆ கையால் சத்துருவாகிய இந்தப் பேய்க் கூட்டங்களைவிட்டு காயந்தளராமுன் சிவன்றிருவடியடைதற்குநீசொன்னபடி சத் தியமாயநடப்பேனென்று மனஞ்சொல்ல அறிவுகூறுகின்றது.

பணியறுத்தல் முற்றிற்று.

[அறிவுகூறுதல்.]

வேறு.

பொன்னினெனஞ்சமேசொற்படி கேட்கவும்பொரு ந்தியேகன்றாக, இன்னமின்னமும் பேதமைகொள்ளவு மோவில்லறந்தனைவிட்டு, தன்னைத்தானறியாமலுஞ்சின

ணடிசார்வதுமிழந்தாக்கால், பின்னமபின்னமாயிரண்டு ங்கெட்டா னென்றேபேதைமைகொள்வாயோ. (௫௦)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) இதனால் நான்தெளிந்தவிதத்திலே பேதைமை யென்பதிருக்குமிடமுங்காணேன், சர்வபணியு மறுத்துவிட் டேன. ஆனால்தெளிவாய்க் கேட்பதற்குத் தெரியும்படிசெய்யு முதவிவேணுமென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சுத்தநெஞ்சமே சற்குருமலரடி தொழவகைகேட் பாயேல, பத்தனுகியேமானுபிமானமும்பற்றறவிட்டே நீ, குற்றமேதுமற்றெவ்விடங்காண்கினுங்கூறுடற் களி ப்புற்று, பற்றுமாகியேதிருவடிகெதியெனப் பண்புடன் பணிவாயே. (௫௧)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) ஆனால் மானுபிமானமவிட்டு, குருவை யெவ்வி டங்காண்கினு மனோவாக்குக்காயம் ஒத்து, அன்புகளிகூர்ந்து எண்சாண்தேகத்தை இருகையாக்கி, நனமலரால் அவர்திருவ டிக்குச்சாத்தி, தீர்க்கதெண்டம்பண்ணச்சொன்னீர், அதற்குச் சந்தேகமில்லை. இவ்வளவுமிழந்து நான் இதற்கஞ்சவேனே. அப்படியே செய்வேன். ஆனால் அதிகமாக உலகத்தார் இகழத் தக்கதாக குரு மிகுந்த அசங்கியரூபமாக விருந்தால் நான பணியுமளவிலேலநிந்திப்பார்களே! அல்லது அவ்வாறிருக்கினும் அப்படிதான்செய்தல் முறைமையோவென்று மனங்கேட்க அறி வு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

குவலையத்தோர்சொல்கின்றகேள்வியாலே
 கூசுகின்றநெஞ்சகமேகூறக்கேளு
அவலமாங்கடலுக்குளாழுமாண்பர்
 அபிமானம்வந்துன்னை அண்டிற்றானால்
சவலையாய்நழுகிடுவாய்முத்திமார்க்கந்
 தான்கிடைப்பதருமையதைச்சார்ந்தேநீதான்
சிவனடியையடைவதற்குசற்குருத்தன்
 றிருவுளத்துக்கொத்தவழிசெலலுவாயே. (௫௨)

[மனங்கேட்குதல்]

(அ-கை.) ஆனால்சற்குருவின்றிருவடியில் சரணஞ்செயவதற்குமார்க்கமுண்டோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

ஓம்நமசிவாயவென்றவக்ஷரத்தை
 உச்சிக்கண்புருவமவாய்மூக்குநாசி
தாமசங்களில்லாமல்முக்காலுந்தான்
 சற்குருவின்றிருவடியில்தானமுத்தி
நேமமாயிப்படியுஞ்செய்வதுந்தான்
 நேரானசரணத்தின்தீக்ஷையாகும்
ஆம்பின்னேயென்றெண்ணியிருந்திடாதே
 ஐயனுள்ளங்களித்திடவேயாசைவைப்பாய். (௫௩)

[மனங்கேட்டதல்.]

(அ-கை) ஆனால் சரணதீக்ஷையுமறிந்தேன், செய்யவுந் துணிந்தேன், கருத்தில் செய்யும்படிகுறித்தால் போதாதோ காயத்தினாலு மிகுதியாய் வணங்கிக் கொள்ளவேணுமோவென றுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

காயமனவாக்கினாலடைந்தகன்மங்
காயமனவாக்கினாற்கடக்கவேணும்
காயமனவாக்கினாலொன்றொழிந்தால்
கடமெடுக்கவேதுவாங்கண்டுபாரு
நேயமுள்ளவைம்புலனாற்சூழ்ந்ததுன்பம்
நீக்குதற்குமுறையிதுதானினைத்துப்பார்நீ
மாயவித்தையாமென்றுநழுகிடாதே
வஞ்சகத்தைநீவிட்டுவணங்குவாயே. (௫௪)

[மனங்கேட்டதல்.]

(அ-கை.) ஆனாலப்படியேசெய்கிறேன், இன்னஞ் சற்குருதிருவுளத்துக்குப் பாங்காய் நடக்குமார்க்கங்கள் சொல்லவென றுமனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வஞ்சனைபொய்சூதுகபடங்கணீக்கி
மானவபிமானமுதற்பெருமைநீக்கி
யணுகுகின்றகோபமாங்காரநீக்கி
ஆசைபதைப்பாதியடியோடேநீக்கி

துஞ்சவேசோதித்துப்பார்த்தாலுந்தான்
துணிவாகித்திருவடியேகெதியென்றெண்ணி
தஞ்சமென்றேயையனாகிழல்போற்காத்து
சரணத்தினேவல்செய்துதழைத்திடாயே. (௩௫)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) அப்படியே தொண்டுசெய்கிறதற்கு மாளானேன், எத்தொழிலுமில்லாமல்சர்வ ஆசையுமிழந்து நிரந்தரமாயிருக்கிறபெரியோர்களிடத்தில் தொண்டுபட்டிருந்தால், வயிற்றுப்பசிக்கு அன்னம்வேண்டியிருக்குமே யதற்கென்னவயனமென்றுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

இச்சையுடனெத்தனைநாளிவ்வுலகில் வாழ்ந்தாலுமிடரேசொல்வார், நச்சைவருமிதனாலேதெளிவுற்ற மனதென்றுநலமேலோர்சொலலாா, சச்சிடையைவிட்டுவிடுமுப்பொருளேயோர்பொருளாய்த்தனித்துப்பாரு, பிச்சையென்னவிசாரமென்னதலைமேலேசுமந்துவரப் பெருமானுண்டே. (௩௬)

[மனங்கேட்குதல்.]

(அ-கை.) அப்படியிருக்கச் சிவசொரூபத்தைப்பெற்றிருக்கின்றபோகள் ஆகாரத்துக்காகப் பலவிதங்களான தொழிலசெய்கிறதும், சித்துகள் விந்தைகள் செய்கிறதும், பொய்சொல்லுகிறதும், சிவசின்னவேடத்தைக் கபடாகத் தரித்துக்கொள்ளுகிறதும் என்ன? வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

ஆனை முதலெறும்புகடைக் கமுதளித்துக் காக்கு மொருவரனேயல்லால், சேனைவிதமாகவிந்த மானிடர்கள்செய்வதெல்லாஞ்செகததின்மாயை, ஊனைமுதல்சுமந்தவரார் உண்டபின்பு களித்தவரார் உற்றுப்பார்க்கில் தேனையுணருசி கண்டதிருடனைத்தான்கணடவர்க்குத் தெரியுந்தானே. (௫௭)

[மனங்கேட்டுதல்.]

(அ-கை) ஆனு லறியலானேன், பெரியோர்களிடத்தில் பக்திவைராககியத்துடனே கிஷிடநேரமாகிலும் பிரியாமல் சரணைடைந் தேவலுஞ்செய்துகொண்டிருக்கிறவாகளுககு எந்தபதவிகிட்டுமே? என்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

ஆசான்கிருபைமிகுந்ததனுலந்தவுடற்போய் மறுவுடலில, கூசாதிருந்துந் தன்னணடை குறைவொன்றில்லாநிறைவாக, தேசாநேசர்சூழ்ந்திருக்கத் திருவோலக்கஞ்சேவிக்க, ஈசாவென்றேமறைபோற்றவெய்தும்பரமபதம்நெஞ்சே. (௫௮)

[மனங்கேட்டுதல்.]

(அ-கை.) ஆனுல் நிழறபோற்பிரியாமற் சரணத்தேவலுஞ் சலியாமலும் செய்கிறேன். ஐயோ? வெத்தனைபிறவியோ எடுத்துவந்துகொண்டிருக்கிறநான் இன்னுமோர்பிறவிபிறப்பேனோ;

முழுதும்பிறவாமலிருக்கிற மார்க்கமுண்டோ? அதைச்சொல் லவென்றுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

வேறு.

உடல்பொருளுமாவியுஞ்சற்குருநாதற்கே
 வுண்மையுடனுதகத்தால்தாரைவார்த்து
நடமாடுமிமமூன்றுமெனதெனவென்ணு
 நாயகனுஞ்சீவனேயேயடிமையாக்கு
இடவாகருதவருமல்நிலைததுநெஞ்சே
 தேகந்தானொழியளவுமுதவிசெய்தால்
படமாடுமரவத்தையணிந்தவீசன்
 பதம்பெறுவாயுள்ளபடிபகர்ந்திட்டேனே. (ருக)

[மனங்கேட்குதல்.]

(அ-சை) ஆனால் நலமதாயிற்று, இதுவரைக்கும் நானே உடல், பொருள், ஆவிமூன்றுக்குமுடையவனென்று நீர் சொன்னபடிகேட்டு சருவசங்கையுமிழந்து நிருவிகாரியாய் என்ன கெதியென்றுகேட்குமளவிலே சீவனுணடென்றும் சீவனுக்கு உடல்பொருளாவி சொந்தமென்றும் அதைக் குருவுக்குத் தத் தஞ்செய்து சீவனே அடிமையாக்கி ஆசான்சொறபடி நடந்து சிவேசனாகிறதாய்ச்சொன்னீர், மகாசநதோஷமாயிற்று! அப் படியே சீவன்முத்தி யடைகிறதானால் நானித்தனைப் பிரயாச ப்படவேண்டியதென்ன நான்-நீயார் இவ்வளவுநான் சந்தேக மற்றுத் தெளிவுகொண்ட லாப மென்னவாகப்போகிறதென் று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

சீவனேநீயாகுமறிவுநீயாஞ்
சிவன்றானேநீயாகும்பரமுநீயாம்
நாவுகின்றசெயலுடனேமனதெனறுன்னை
சாற்றியதோராநாமமாஞ்சாலசங்கை
மேவலேமொழிகிறதுமுனதால்நெஞ்சே
மெலலமெல்லச்சொற்படியேமேவினக்கால்
நாவுதனிற்பிரிகின்றபேதமற்று
நாம்சிவமாய்வாழலாம்நாடிப்பாரே. (௬௦)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) ஆறு லறியலானேன், இனி உடல்பொருளாவி மூன்றும குருவுக்குத் தத்தம்பண்ணச்சொன்னீர். இந்தமூன றையுந் தெரியபபடுத்துமென்று மனங்கேட்க அறிவுகூறுகின றது.

[அறிவுகூறுதல்]

உடலென்றுறசடாதாரவுடலேயாகும்
உயிராணபிராணனேபாவியாகும
திடமாகவிரண்டையுந்தானெனதென்றுற்ற
சீவனேசிறநமபலபபொருளதாகும
அடவாகவிம்மூன்றுங்கொடுத்துத்தன்னை
அடிமையெனசசத்தியமாயிருந்தால்நெஞ்சே
இடமானகுருபெறவேயுபதேசிப்பார்
இப்படியேகுருபததிலிஷ்டம்வையே. (௬௧)

[மனங்கேட்குதல்.]

(அ-கை) அப்படியே செய்யலுற்றேன், இனி தீக்ஷை யென்பதும், நூலென்பதும், குரு சொலலென்பதும், சாதக மென்பதும், முத்திவீடு என்பதும், தெரியச் சொல்கவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

தீக்ஷையது நூலாகும நூலவிளக்காம்
திறமானசற்குருசொல்லுபாயமாகும்
தாககுகின்றசாதகந்தானேணியாகும
சபையென்றவெளிதானேவீடதாகும்
மார்க்கமென்றறிதுநெஞ்சேமுன்னோர்கூட
வாழ்ந்தவருமிபபடியேமருவிப்பாரு
நோக்கையிலேயிதிலொன்றுகுறைவிற்றானால்
நொந்துநொந்து பிறவியினிலுழைக்கும்பாரே. ()

[மனங்கேட்குதல்.]

(அ-கை) எல்லாம் உள்ளபடி யென்றறிந்துகொண்டேன, இனிமேல் சற்குருவினுடைய திருவுளமகிழ்ந்து நான் கடைத்தேறும் பொருட்டாய் உபதேசஞ் செய்யும்படி சொல்க வென்று மனமகேட்க அறிவு கூறுகின்றது.

[அறிவுகூறுதல்.]

அப்படியேசெய்விப்போமழகுநெஞ்சே
யாசானறன்றிருவடிக்கேயனபதாக
வெப்படியாகிலுமுன்னேமாயைகிட்டி
யிதமபோலாமஜ்ஜனமதற்கிடங்கொடாதே

செப்படிபோல்வந்ததொருஜெனனநீங்கி
  சிவானந்தபோதகமாய்த்தெளிவாய்நீயும்
மைப்படியுங்கண்ணிபங்கன்குருவாய்வந்து
  வாதனையைத்தீர்த்திடுவார்வணங்குவாயே. (௪௧)

[போதுகவனிப்பு.]

(அ-கை) இதுவரையிலுஞ் சிவனைப்பின்னிட்டு, மனதை முன்னிட்டு, சற்குருவை பினனிட்டு, அறிவு முன்னிட்டுக்கொண்டு மனத்தினுடைய பணியறுத்து சற்குருகடாக்ஷம் பெற்றுக்கொளளும் வகை கூறினது; இனி மனதைப் பினனிட்டு ஜீவனை முன்னிட்டு ஜீவனுக்குள் மனமொடுங்கி முததியடையததக்கதாக அறிவைப் பின்னிட்டு சற்குருவைமுன்னிட்டு அறிவைச் சீவனுககுப்போதித்து நீ நானெனறு இரணடில்லாத பரிபூரணமாய் ஆக்கும்பொருட்டு ஜீவனுக்குக் குரு சிவானந்தம போதிக்கு மார்க்கம் கூறுகின்றது.

[ஜீவன் சொல்லுதல்]

ஆதியேயந்தமேயருமையான
  வருட்கடலேயையனேயகண்டமுற்ற
சோதியேசொரூபமேசுகததைக்காட்டும்
  சுத்தனேசித்தனேசுயமபிற்பொங்கும
பாதியேபரமனேபாரினைமீதே
  பரமபோகச்சுந்தரமாயெழுந்துவந்த
நீதியேயென்னுடையபிறவிநீக்கும
  நிச்சயமேதிருவடிக்குச்சரணமேற்றனே. (௪௨)

[குரு சொல்லுதல்.]

தீக்ஷைமுறையாகவேசரணஞ்செய்த
 செல்வனேஞானமென்றதீரமபெற்று
பாக்கியமாய்மெய்ப்பொருளைக்கொள்ளவேண்டிப்
 பாரினிலேவெகுபேர்கள்பதைத்துவந்தார்
பாக்கியத்தாற்சித்தறிஞர்சிலதுபேர்கள்
 பாழ்மனத்தாற்சித்தறிஞர்சிலதுபேர்கள்
தாக்கியதோஷாதகத்திலதாளாமற்றான்
 தவறுவரேபோயினாசுகவையுற்றே. (௬௫)
சங்கையதுவிட்டாற்போறறிணைபட்டு
 சாதகிர்தத்தின்பூட்டுகளைத்தெரிந்துகொண்டு
மங்களமாய்தீக்ஷைதனைப்பெற்றுநன்றாய்
 வையகத்தின்சுழலினிலேமயங்கிச்சென்று
பங்கமாயபிமானத்தொழிலேசெய்து
 பதுங்கினார்குருமுகத்துக்காகாமற்றான
திங்களணிசடையாதன்பாதஞ்சேர
 தீவினையில்மெலிந்திட்டார்சிலதுபேர்கள். (௬௬)
அப்படியேகீழ்மூழ்கித்தடத்தைவிட்டே
 யமபலத்திற்கேகாமறகாலன்பாசந்
தப்பவகையறியாமற்பிறவிதன்னிற்
 சாருவையோகிலேகொண்டுசாதிப்பாயோ
ஒப்பவேயுடற்பொருளுமாவிமூன்று
 மூலகத்தால்தாவைவிட்டுவினைநானென்று

செப்பவுந்தானுவிழுக்தேயடிமையாகிச
சிந்தையற்றுசசிவமாகிவாழ்கநீயே. (௬௭)

[ஜீவன் சொல்லுதல்.]

பாக்கியங்கள்பெறவேண்டி குருவடிக்கு
பதறியேவந்தொருபாரிலுள்ளோர்
வாக்கினல்மனத்தாலுஞ்சாதகத்தின்
வருத்தத்தாற்சிதறினபோராரானையா
நோக்கினதிற்றவருமற்பிடிததுமுத்தி
நுண்ணறிவாற்பூரணத்தையடைந்தாரோ
தாக்கியதோர்மைந்தர்களையறியச்சொல்லும்
தயாபரனேகுருமூர்த்திசொல்வாய்நாதா. (௬௮)

[குரு சொல்லுதல்.]

எத்தனையோமைந்தர்களைப்பெற்றேனப்பா
வெடுத்துரைப்பேனமதலேயியின்பமாக
பத்திவைராக்கியமுநழுகிடாமல்
பாரிலுளளோர்தங்களுக்குச்சொந்தமாக
முத்திபெறுமனக்கணனுமபிரகாசித்து
மூதறிவால்தத்துவதனைமுழுதுமாள
சத்துசித்தானந்தமுமாய்ப்பூரணத்தைச்
சார்நதிட்டான்குழந்தையென்றதங்கந்தாமே. ()

ஆமென்றேவந்தவர்களின்னமுண்டு
அவரவர்க்குத்தீக்ஷைவைத்தோமன்பதாக

ஓமென்றமுக்திநெறிக்கொவ்வுவாரோ
    ஒதுங்கியேபதுங்கியேயோடுவாரோ
நாமென்றவகங்கொண்டுழுகிப்போறார்
    நாதனையேதூஷித்துநலம்பெறாமல்
போமொன்றேதள்ளவில்லையவர்கள்தானே
    பொல்லாங்கைக்குறித்தல்லோபோய்விட்டாரே.
நிலைககவென்றுவந்தவரிவதவரிப்போன
    நெஞ்சகரைச்சொல்லக்கேள்நினைவாய்நீயு
முலைகருதிகைப்பிடித்துப்பாலுண்ணாமல்
    மூடத்தால்நானென்றமகத்தையுற்று
கலைகாந்தியில்லாமற்சாதிக்காமல்
    கற்றபொருள்போதுமென்றேபெருமைகொண்டு
கொலைகளவாம்வஞ்சகத்தைவிடாமற்றானே
    குலைந்திட்டான்வைத்தியலிங்கன்குருநான்றானே.

[ஜீவன் சொல்லுதல்.]

அப்பனேமைந்தர்கள் தன்றிறத்தைக்கேட்டு
    அறிந்திட்டேன்முத்திபெறவேறார்க்கடியேன்றானே
செப்பமாஞ்சரணங்களகோடிசெய்தேன்
    சிதறினவர்பால்மனமுஞ்சொல்லவொட்டேன்
கோபம்பனவேயெனையாளவிங்குவந்த
    கொற்றவனேயுனைப்போலத்துலக்கங்காணேன்
இப்பவேயடிமைகொண்டுகாக்கவேண்டி
    யிரங்கியேயருளபுரிவாயெந்தன்கோவே. (எ௨)

அறிவாளனாகியேபணிபறுத்து
அச்சயகளெல்லாந்தானறுத்துப்போட்டு
குறியாளனாகவேதுணிந்துவந்த
கொடிமபாவியெனையாளக்கூச்சமென்றே
தறியாளனாகினைவுலகத்தேதான்
சங்கையதுவந்தாலுந்தாளமாட்டேன்
முறியாளவந்தகுருநாதா வுந்தன்
முகிழ்மலர்த்தாளகெதியென்றுமுனைந்திட்டேனே.

[குரு சொல்லுதல்.]

நிலமதனைசலதநிறைற்சுத்திசெய்து
நிராமயமாங்கணபதியைநாட்டிவைத்து
பலமுடையசோதிமலர்சாத்திமிக்கப்
பரிவானபுகைதூபங்காட்டிபபின்னுந்
தலமுடையவெளியதனைநிவேதனஞ்செய்
சரணஞ்செய்யெனமகனேயுபதேசிப்போம
பிலமுடனேயிடம்வலமாய்ச்சுற்றிவந்து
பெருவிரலைப்பற்றிக்கொள்பேரின்பத்தே. (௭௪)

அன்புடனேயுடல்பொருளுமாவிமூன்றும்
அமுதியாயளித்துவிட்டுநீதானையா
தெனபுடனேயடிமையெனச்சத்தியஞ்செய்
சிதறுமல்நில்லப்பாநிகைகூவைப்போம்
மின்புக்தன்செவிதானேயோனியாக
பேசுமொகதனுவுதானிலிங்கமாக்கு

இன்பமுடனனுபோகத்திருக்கவென்றே
இருசெவியிலுபதேசமேற்றுவோமே. (எரு)

[ஜீவன் சொல்லுதல்.]

அப்படியேபஞ்சசுத்திபூசைசெய்தேன்
அழகாகச்சரணங்களபிரகாரஞ்செய்தேன்
செப்பினதோர்பெருவிரலைப்பற்றிக்கொண்டேன்
தேகமுடன்பொருளாவிசத்தந்தேனே
ஒப்பதுவாயானுமேயடிமையானேனே
யுகமுழுதததனைடவரினுமசையாதிருப்பேன்
தற்பரனேதீக்ஷைசெய்யுங்கருணைவைத்து
சற்குருவேதிருவடியிற்சரணென்றேனே. (எசு)

[குரு சொல்லுதல்]

வேறு.

ஞானமென்பதில்நாலுவகையுண்டதை நாமுரைத்திடக்கேளாய், தானமுற்றனர்சரியையுங்கிரியையுஞ்சாருமேசிவயோக, மோனமுற்றமெய்ஞ்ஞானமே நான்கதாமுடிவதைப்பெறுவாயே, யீனமற்றவென்மைந்தனே யுனனிடவின்பமேதுரைப்பாயே. (எஎ)

[ஜீவன் சொல்லுதல்.]

தேசிகாவிந்நால்வகையென்றதை தெரியவுமுரைத்திட்டால், மோசமாயினபமுற்றிருப்பது தனைமொழிக்கிடுமெனக்கேட்பேன், ஆசையற்றதாயிருந்திடிலுழைத்

திட வதிசயங்கொள்வேனுன், நேசமுற்றதிற்பத்தியே யுறைத்திடில்நிலைததிடுமையாவே. (எஅ)

[குரு சொல்லுதல்]

அங்கசுத்தியுமாலையந்தொழுவதுஞ்சரியை யென் றறைவார்கள், மங்களத்துடனட்டமாசித்தியும் வரை யுஞ்சக்கரபூசை, பொங்கமானதுகிரியையாம் வாயுவை பிரணடிடாதிழுத்திட்டு, தங்கிநின்றதோர்யோகமென் றிதனையேசாறறிடுமறைதானே. (எசு)

ஞானமேதெனக்கேட்டிடின்தத்துவ நானெனவு ணர்ந்திந்த, ஊனைநானெனவுரைததனையகன்று பின் னொழிவறத்தனைக்கண்டு, மானமவெட்கமுந்துக்கமுங் கவலையும் வஞ்சனைதானபோக்கி, யீனமறறுநான்சிவ மெனத்துணிந்தது மிழந்ததுமுடிவாமே. (அ0)

[ஜீவன்கேட்க குருசொல்லுல்.]

இந்நாலினிலினபமுற்றிருக்கையி லிச்சடம்விழு ந்திட்டால், தொந்தமானதோர்பலனென்ன தெரிந்திட ச்சொலலுவாய்குருமூர்த்தி, சொந்தமாகவே கேள்மக னேயதன்சுகமதையறிவிப்போம், தந்தனங்களாய்விடா மலே கேட்பதுசரியென மகிழ்ந்தேனே. (அக)

சரியையென்பதுகுறைவறச் செய்துமேதன்கடம் விழுந்திட்டால், கிரியைசெய்யவேயெடுத்திடுங்கடமது கிரியையுமுடிந்தேகில், உரிசையாகியயோகமே செய்ய

வுமுடலெடுத்துழைக்குங்காண், பரிகோள்யோகமு மு ற்றவுமுடிந்துடற்பாரினிலுருவாமே. (அஉ)

ஞானமேபெறவெடுத்திடுமவ்வுடல்நழுகிடாதுனை த்திட்டா, லீனமாகிபசெனனமும்போக்கிடுமீசனே தா ஞரி, வானமுற்றதோர்சச்சிதானந்தமாய் வாக்குனைக கெட்டாத, மோனமுற்றுதானெக்குமாய் நிறைந்தது முத்தியென்றுணர்வாயே. (அங)

[ஜீவன் சொல்லுதல்.]

அப்பனேயெனையடிமையாககொண்ட வோரபூகு ள்ளகுருமூர்த்தி, தப்பிவகெதிலேறெனக்கிலலைநின்று ளதுகெதியென்றேன, ஒபபவேசிவஞானமுமுணாத்தி டிலுகர்ந்தி லூற்றிக்கொள, டிபபமவபரவீடதிலேகு வளீசனேயருளவாயே (அச)

[குரு சொல்லுதல்]

வேறு.

தத்துவமேயுடல்தானெனுமானதுதன்னையறிந்தி டுநீ, சிதததுவாயபிராணனிரானதில திரண்டதைக்க ண்டிடுநீ, சற்றுமேகாணுக்கண்மணியானதை கண்டு தெளிந்திடுநீ, முற்றுசிவானந்தபோதகமானதுமுத்தியு மிதுதானே. (அரு)

வேறு.

அறிவுபோதகமென்றநூலைப்பாரு
அதற்குமுன்னேஉடலறியும்விளக்கம்பாரு

பிறிவின்றிமேவின்றிமறைப்புமின்றிப்
பேரின்பவமுதமழைபெய்தநூல்தான்
நெறிகொண்டவர்நூலையிசைந்துபாரு
நிலைக்கவேயப்படியேதீக்ஷைவைப்போம்
பொறிவிட்டுசெபைபுகுவாய்பிக்கோயில்லே [ள்ளே.
பெரும்பொருளைக்கைக்கொண்டுபிழைத்துக்கோ

[ஜீவன் சொல்லுதல்.]

அப்படியேபோதிரகமுத்திபெற்றேன்
அரியயனுங்காணாதவடிவுங்கண்டேன்
தப்பியேயிளைக்காமறபிழைத்துக்கொண்டேன்
சஞ்சலத்தையிழந்துநானசுகத்தைப்பெற்றேன்
ஒப்புவமைசொல்லவொருவரையுங்காணேன் [ன்
உனைப்போலதெளிவுரைசகுங்குருவுங்காணே
செப்பவேநாவிழந்தேன்பரமானந்தத்
தீவிலேசேர்ந்திட்டேன்வாழ்ந்திட்டேனே. (அஎ)

ஞானியெனறபெயர்களையேகண்டுகொள்ள
நல்லதொருகண்பெற்றேனபேசவென்று
வீணமறச்சொறகற்றேன்சிரவணத்தால்
ஏகாந்தபரகவனமெய்தலானேன்
மானமற்றவடியருடனுசைகொண்டேன்
மருவுமுடல குருவுக்கேவணங்கிபெற்றேன்
தானமுற்றேன்சிவானந்தந்தனிலேநின்றேன்
சசிதாநந்தனென்றேதழைத்திட்டேனே. (அஅ)

வாழ்வுமுதற்சம்பத்தைமதித்திடாமல்
மலைமேலேயேறினதோர்பறவையானேன்
தாழ்வுகளாயுலகோர்சொல்நிந்தையெல்லாம்
சகாயமெனறேயெண்ணிசசந்தோஷமானேன்
வீழ்வதருகரகிலுள்ளமாண்பர்களெல்லாம்
வீழாமலேமனிதர்மேலுமானேன்
ஏழுலகுமமலேழுமநானேயானேன்
ஏகாந்தத்தீவினிலேயிறங்கினேனே. (அகூ)

[குரு சொல்லுதல்]

மைந்தனேயுனைப்போலவோடிமெள்ள
வாதனையேதீர்ந்துமதிமயங்கிடாமல்
பந்தமறுத்தேபிசுபுகுருவைததேடி
பரமாகிவாழ்ந்தவர்களுண்டோவப்பா
சிந்தையற்றபெரியோரைவணங்கிக்கொள்ளு
சிவஞானிதனனுடனேநேசஞ்செய்தே
எந்தனையேபெற்றவனேயப்பாவபபா
வெடுத்தணைத்தேயம்பரத்திலிருபபோமாமே ()

[ஜீவன் சொல்லுதல்]

வெண்பா.

மறாதேனோர்வார்த்தைதமகிழ்ஞானமூர்த்தி
துறந்தேனினித்தெரியச்சொலவாய்-சிறந்திலகு

பத்திசெய்வோருக்குப்பலனேதைதக்கெடுக்கும்
குதர்க்கருக்கென்னகுணம். (௬௧)

[தரு சொல்லுதல்.]

விருத்தம்.

எண்ணிலாத்தலங்களியாகங்கள் செயினுமீஸ்வர
விஷ்ணுவாலயங்கள், பண்ணுலாக்கவிதை பாடினும
னேகம்பாரினிலவருமபலனேது, கண்ணுலாவியநற்சுரு
திமெய்ப்பொருளைக் கண்டரனடியாருக், குணலா
மெனவமுதளித்தவனடைபல னுரைக்கவுமுடியாதே ()

வேதமாகமசாத்திர புராணங்களவிரிந்தநூலறிந்தி
டாவிந்து, நாதமேயுருவாமதவிதானந்தஞானமேபெற
றிடவேண்டின, ஓதியல்லவாசத்துச் சித்தானந்தமுற்ற
நல்லடியோர்க்குப, பாதபூஜைகளடைசலுஞ் செய்தவர்
பலனுரைக்கடங்காதே. (௬௨)

கலித்துறை.

அன்னமளிப்பாரைக்கலைப்பாருமிந்தவவனிமிசை
பின்னலவாசகுட புரிவார்வினைபபாரிகழ்ந்திடுவார்
மன்னவராயிருந்தேமறிப்பாரையுமறலியினி
யென்னென்னவேதனைசெய்வான்முடிவில்லையமபரிதே ()

சிவனருள்பெற்றுயர் மேலோர் தமக்குஞ்சிவனையு
ன்னிச், தவஞ்செயுமனபர்க்குஞ்சிவவேடம் பூண்டதன்

ணியர்க்கு, மூவந்தேபணிபுரிவார்மேலுலக ருண்மைய தாய், அவஞ்செய்தவரையிகழ்வோரடைவரருநரகே. ()

பெரியோர்க்குத்தொண்டுசெய்வாரைத்தடுத்திடுமே பேதையரும், சரியாதிநிலைசார்ந்தவர்க்கல்லல் சமைப்பவரும், பரிவானதீட்சைகொண்டோரை மறிக்குமபாதகரும், எரிவாயநரகத்தெண்ணிற றுயரிலிருப்பரொன றும். (௯௬)

வெண்பா,

இந்நூலைப்பார்ப்போர் எடுப்போர்படிப்போர்
நன்னூலெனமனதினுன்னுவோர்-பொன்னூற்
படியேறித்தாண்டிப பவசாகரத்தைக
கடவுளக்கு முன்னிற்பார்காண். (௯௭)

சந்தேகமாதிகளைச சாராமலேயகற்றிப்
பந்தபாசங்களைப் பாழாக்கும - இந்தநூல்
எந்நாளுமழியா மேகாந்தவீடதனைச
சொந்தமாக்குமெனவேசொல். (௯௮)

கலிவிருத்தம.

அரணைங்கிரிவாழி யம்பிகைதாள்வாழி
பெருமானபதம்வாழி பின்னைசரணம்வாழி
பரமேட்டியடிவாழி பாரதிபாதம்வாழி
கரிமுகன்கழல்வாழி கந்தனதிருவடிவாழியே. (௯௯)

கொச்சகம்.

வான்வாழிவானையளி மாதவரும்வாழி
கோன்வாழி தருவாழி குவலயத்தோர்வாழி
ஆன்வாழியமராமுத லிருடிசித்தர்வாழி
ஞானநீயெனகமற்ற நாதாசகள்வாழி. (௪00)

சிவானந்தபோதம் - முற்றிற்று.

சற்குருவேதுணை.

உ

வேலுமயிலுந்துணை.

இப்போதச்சிட்டிருக்கும்

சுத்தப்பிரிதிகளாவன —

——·0——

சுப்பிரமணியபண்டிதர் ஜீவரக்ஷாமிர்தம்	ச—0—0
பாலகாண்டமூலமும் உரையும்	௩—அ—0
பெரியபுராணம் (செய்யுள்)	௩—அ—0
திருவிளையாடற்புராணம் (செய்யுள்)	உ—0—0
வமலராமாயணமென்னுட ஞானவாசிட்ட வசனம்	க—அ—0
வள்ளலார்சாத்திரம	க—அ—0
திருமந்திரம் - ௩௲	க—அ—0
ஞானப்பிரகாசதீபிகை உ-(அண்டகோளபடங்கள்)	க—ச—0
மேற்படி ஆப்பவுண்டு	க—0—0
டாடுதுறை	0-கஉ—0
கந்தபுராணச் சுருக்கம்	0—க0—0
குமாரதேவர் சாத்திரம்-க௬ உள்ளது(காலிக்கோ)	0—க0—0
மேற்படி ஆப்பவுண்டு	0—அ—0
விஷ்ணுதலமான்மியச சுருக்கம்	0—அ—0
சடாட்சரமாறல் ௬-யந்திரங்களுடன	0—உ—0
கைவல்யம் மூலம்	0—உ—0
அஷ்டோத்திரம்	0—க—0
புசண்டாஉபநிடதம (௩உ)	0—0—௬
கந்தர்சஷ்டிகவசம்	0—0—௬

இவை சிதம்பரம் மேல்கோபுரமண்டப புத்தகஷாப்பிலும், சென்னை மநோன்மணிவிலாச அச்சுக்கூடத்திலும் பெற்றுக் கொள்ளலாம். ரோ-லோகநாதமுதலியார்.

உ௯-ரெ. ஆபஹூர் முத்தியாமுதலியார் வீதி சென்னை.